NOOLAHAM
FOUNDATION

**நூலக நிறுவனம்**
**மாதாந்த அறிக்கை - ஜூன் 2017**

**வணக்கம்**

நூலக நிறுவனத்தின் 2017 ஜூன் மாத ஆவணமாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்சியடைகின்றோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| வகை | எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 708 | 32118 |
| தரமேம்படுத்தல் | 26 | 1936 |
| பக்கம் தவறியவை | 17 | 1974 |
| பக்கம் சிதைந்தவை | 3 | 272 |
| நோக்கத்தில் அடங்காதவை | 2 | 278 |
| மொத்தம் | 782 | 37438 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- கொக்குவில் அலுவலக கிளையில் இம்மாதம் 306 ஆவணங்களின் 21040 பக்கங்கள் மின்வருடப்பட்டன.
- யாழ்ப்பாண பொது நூலகத்தில் 438 பத்திரிகைகளின் 8638 பக்கங்கள் மின்வருடப்பட்டன.
- ஏழாலை களச்செயற்பாட்டில் 38 ஆவணங்களின் 7760 பக்கங்கள் மின்வருடப்பட்டன.
- 26 ஆவணங்கள் 860 பக்கங்கள் ஏற்கனவே மின்வருடப்பட்ட பிரதிகளாக இனங்காணப்பட்டுள்ளது. எனினும் இவை வெவ்வேறு சேகரிப்புக்களில் இருந்து பெறப்பட்டவை என்ற காரணத்தினால் மின்வருடப்படுகின்றது. ஆயினும் மேலுள்ள அட்டவணயில் இந்த எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை
- 700 ஆவணங்களுக்கான பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.
- 262 ஆவணங்களுக்கு கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.
- 30 தரமேம்படுத்தல் ஆவணங்களுக்கு கட்டுரை நிர்வாகத்தரவு இணைக்கப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- சேகர அபிவிருத்தியில் எழுத்தாளர், பதிப்பாளர்களான வி. ரி. இளங்கோவன், சுவர்ணா, செ. கிருஷாந், க, பரணீதரன், கணேசராஜா, பத்மா இளங்கோவன், சஜீலன் ஆகியோரது சேகரிப்புக்களும் வெளியீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் அவர்களில் சிலரது சேகரிப்புக்கள் மின்வருடப்படவுள்ளன. ஆவணங்களை பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- ஜூன் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

வெளியீட்டாளர்கள்

- ★ பரிசு
- ★ சங்கப்பலகை
- ★ வாகை
- ★ ஐரோப்பா முரசு
- ★ மூலிகை
- ★ தமிழன்

எழுத்தாளர்கள்

- ★ பத்மராணி இளங்கோவன்
- ★ நாவேந்தன்
- ★ வி. ரி. இளங்கோவன்

**காப்புப்படி (Backup)**

- இம்மாதம் காப்புப்படி ஏதும் எடுக்கப்படவில்லை.

**ஆவணகம் வலைத்தளம் (aavanaham.org)**

- ஆவணகம் (aavanaham.org) வலைத்தளத்தில் கீழ்வரும் விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

| **வகை** | **எண்ணிக்கை** |
|---|---|
| நூற்பட்டியல் | 2138 |
| தமிழ் நிகழ்த்துகைகள் | 1 |
| படங்கள் சேகரம் | 42 |
| குறுங்கால ஆவணங்கள் | 20 |
| கையெழுத்து ஆவணங்கள் | 6 |

**பயனர் சேவை (User Service)**

- எண்ணிம நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) இம்மாதம் 21,369 பயனர்களால் 228,423 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 53.5% புது வாசகர்களும் 46.5% ஏற்கனவே உள்ள வாசகர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

- ஆவணக வலைத்தளத்தில் (aavanaham.org) இம்மாதம் 767 பயனர்களால் 23,386 பக்கங்கள் பார்வையிடப்பட்டுள்ளன. இதனை 53.6% புது பயனாளர்களும் 46.4% ஏற்கனவே உள்ள பயனாளர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

- இம்மாதம் உசாத்துணைப்பகுதியினூடாக இரண்டு வாசகர்கள் ஆவணங்கள் கோரியிருந்தனர். இருவருக்கு உதவக் கூடியதாக இருந்தது.

**எழுத்துணரியாக்கம் (OCR)**

- இம்மாதம் 772 மின்னூல்களுக்கு உரிய எழுத்துணிரியாக்க(OCR) இணைப்புகளை எண்ணிம நூலக இணையப் பக்கத்தின், ஒவ்வொரு இணையநூல் பக்கத்திலும் உருவாக்கப்பட்டுள்ளன.

**வழிகாட்டுநர் சபை (Regulatory Board)**

- இம்மாதம் இரண்டு கூட்டங்கள் இடம்பெறுவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டன. இதில் ஜூன் 11ம் திகதியிற்கான கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெறவில்லை

  ஜூன் 25, 2017

  https://github.com/noolahamfoundation/governance/wiki/RB-Meeting-June-25,-2017

**வரவு செலவு அறிக்கை (Financial Statement)**

- ஜூன் மாதத் தேவைகளுக்காக ரூ. 276,844.72 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் ரூ. 211,425.00, வாடகை ரூ. 30,000.00, தொலைபேசி மற்றும் இணையம் 9,239.65 மின்சாரம் 9,538.20 மற்றும் ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.

- ஜூன் மாதம் அவுஸ்ரேலியா அன்பர்கள் ஊடாக ரூ. 85,110.00 நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

  இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகின்றது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

  நன்றி